திரு. பி. ஆர். தாமஸ் : ஆசிரியர்கள் பலவிதமான விடுப்பு சலுகைகளை அனுபவிக்கிறார்கள். அதே அடிப்படையில் "லீவ் ஆன் பிரைவேட் அஃபையர்ஸ்" என்று ஆறுமாத காலத்திற்கு அரை ஊதியம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரியும் ஆசிரியர்கள் பெற முடியாமல் இருக்கிறார்கள். அது குறித்துத்தான் கேள்வி கேட்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சலுகையை ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இந்தச் சலுகை அவர்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சலுகை சட்டத்தில் இருக்கிறது. அங்குள்ள நிர்வாகிகள் அதைத் தர மறுக்கிறார்கள். அரசே தந்திருக்கிற சலுகைகள் எந்தக் காரணத்தைக் கொண்டும் மறுக்கப்படக் கூடாது என்ற குறிப்பை அரசு ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அனுப்புமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சட்டம் போடுவதே அதைப் பின் பற்ற வேண்டுமென்பதற்காகத்தான். யாராவது அப்படிச் செயல்படவில்லை என்றால், உரிய நடவடிக்கையை நிச்சயமாக அரசு எடுக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ் : அநேக ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அதை மறுக்கிறார்கள், ஆசிரியர்கள் மனு கொடுக்கும்போது. அப்படி மறுக்கப் பட்ட மனுக்களைப் பற்றிய புகாரை உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நிச்சயமாக எடுக்கப்படும்.

Government Dental Wing.

* 59 *Q.*—Thiru A. BALASUBRAMANIAM : Will the Hon the Minister for Health be pleased to state—

(*a*) whether any enquiry was conducted on the complaint given by an Ex-Member of Parliament on the Chief of the Government Dental Wing, Madras; and

(*b*) if so, the decision taken thereon ?

1978 செப்டம்பர் 9]

அரசினர் பல் மருத்துவமனை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அரசினர் பல் மருத்துவமனை தலைமை அதிகாரி பற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொடுத்த புகார் மீது ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரியின் பல் அறுவை சிகிச்சை மருத்துவப் பேராசிரியர் மீதான குற்றச் சாட்டுகள், விசாரணை செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாததால், மேல் நடவடிக்கை தேவையில்லை என்று அரசு முடிவு எடுத்தது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அந்த அதிகாரி எங்கே பணிபுரிகிறார் ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அவர் இப்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : என்ன புகார் அவர் பேரில் வந்தது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : அவர் மீது ஏழு புகார்களை திரு. மாரிசாமி கொடுத்திருந்தார். முதல் புகாரை மட்டும் குறிப்பாக விசாரிக்க வேண்டுமென்று அவர் தெரிவித்திருந்தார். விசாரித்து அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் விடப்பட்டது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : என்ன புகார் என்பதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : முதல் குற்றச்சாட்டு டாக்டர் ராமச்சந்திரன் மிசா கைதிகளுக்கு மிகுந்த தொல்லை கொடுத்தார் என்பது.